**WACE மொழி விண்ணப்ப செயல்முறை -**
**பெற்றோர்/பாதுகாவலர்களுக்கான தகவல்.**

*WACE மொழிப் பாடத்தில்* சேர விரும்பும் அனைத்து மாணவர்களும், WACE மொழிப் பாடத்தில் (*மொழி விண்ணப்பம்*)*சேர்வதற்கான அனுமதி விண்ணப்பத்தை*,மாணவர் வலைத்தளம்(https://studentportal.scsa.wa.edu.au) வழியாக பள்ளி பாடத்திட்டம் மற்றும் தரநிலைகள் ஆணையத்திடம் (ஆணையம்)சமர்ப்பிக்க வேண்டும்.

*மொழி விண்ணப்பம்* ஆனது மாணவர்கள் 10 ஆம் வகுப்பு* படிக்கும்போதே பூர்த்தி செய்யப்படுகிறது.

*மொழி விண்ணப்பத்தை*பூர்த்திசெய்ய, மாணவர் வீட்டிலோ அல்லது பள்ளியிலோ கணினியைப் பயன்படுத்த வேண்டும். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், மொழி ஆசிரியர் அல்லது பள்ளி நிர்வாகத்திடம் உதவி கேட்கவும்.

**தேவையான தகவல்**

மாணவர் பின்வரும் விவரங்களை வழங்க வேண்டும்.

- முன் தொடக்கப்பள்ளி (pre-primary) முதல் ஒவ்வொரு கல்வியாண்டிலும் அவர்கள் படித்த பள்ளிகள்
- ஆஸ்திரேலியாவிற்கு வெளியே அவர்கள் படித்த பள்ளி/கள் பற்றிய அந்த ஆண்டுகளுக்கான பள்ளி அறிக்கைகள்
- அவர்கள் முன்பு வாழ்ந்த நாடுகள் குறித்த விபரங்கள்
- அவர்கள் முன்னர் சென்ற/பயணம் செய்த/விடுமுறையில் சென்ற நாடுகள், உள்நாட்டில் சென்றதற்கான காரணம்/கால அளவு உட்பட. இதில், அவர்கள் விண்ணப்பிக்கும் மொழியும் பேசும் மொழியும் ஒரே மாதிரியாக இருக்கும் நாடுகள் மட்டுமே அடங்கும்.
- அவர்கள் பேசக் கற்றுக்கொண்ட முதல் மொழி/மொழிகள்
- அவர்கள் பேசும், வாசிக்கும் மற்றும் எழுதும் பிற மொழிகள்
- அவர்கள் தங்கள் பெற்றோர்/பாதுகாவலர்கள்/சகோதரிகள் மற்றும் நண்பர்களுடன் பேசும் மொழிகள்
- அவர்களின் பெற்றோர்/பாதுகாவலர்/கள் பேசும் மொழி/மொழிகள்.

**துணை ஆவணங்கள்**

மாணவர் தங்கள் விண்ணப்பத்தில்பதிவேற்றம் செய்ய பின்வரும் ஆவணங்களின் புகைப்படம் அல்லது ஸ்கேன் ஒன்றை வழங்க வேண்டும்:

- பூர்த்தி செய்யப்பட்ட *பெற்றோர்/பாதுகாவலர் ஒப்புதல்* படிவம் (கட்டாயமானது)
- கடவுச்சீட்டு அடையாளப் பக்கம், அவர்கள் வேறொரு நாட்டில் பிறந்திருந்தால் அல்லது ஆஸ்திரேலியாவுக்கு வெளியே வாழ்ந்திருந்தால்
- ஆஸ்திரேலியாவிற்கு வெளியே பள்ளிகளில் படித்திருந்தால், வெளிநாட்டு பள்ளி அறிக்கை/கள்
- சர்வதேச நடமாடல் பதிவுகள், அவர்கள் விண்ணப்பிக்கும் மொழி பேசும் மொழியுடன் ஒத்த நாடுகள் அல்லது இடங்களில் வாழ்ந்திருந்தால் அல்லது அடிக்கடி பயணம் செய்திருந்தால் (ஆணையத்தில் கோரப்பட்டால்).

மொழி விண்ணப்ப செயல்முறை பற்றிய கூடுதல் தகவல்களை WACE மொழி பயன்பாடுகள் வலைப்பக்கத்தில் (https://www.scsa.wa.edu.au/sirs-and-srms-info/srms-information/wace-language-applications) காணலாம்.

* இது 9 ஆம் வகுப்பில் வெகுமதி உடைய மற்றும் திறமையான/துரிதப்படுத்தப்பட்ட மொழி மாணவர்களுக்கும் பொருந்தும், அவர்கள் 10 ஆம் வகுப்பில் இருக்கும்போது 11 ஆம் வகுப்பு மொழிப் பாடத்தை மேற்கொள்ள விண்ணப்பிக்கிறார்கள்.